இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 5-00

சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 05 வியாழக்கிழமை (17 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 82

# தடுப்புக் காவலிலுள்ள தமிழர்களை விடுவிப்பதில் அரசாங்கம் இழுத்தடிப்பு

## தெரணியகலை பகுதியில் தமிழர் வீடுகளில் சோதனை!

கொழும்பு, பெப். 17

தெரணியகலைப் பகுதியில் வசிக்கும் தமிழர்களின் வீடுகளில் பொலிஸார் திடீர் திடீரென சோதனைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஊருக்குப்புதிதாக வருபவர்கள் தங்கள் வீடுகளில் இடமளிக்க வேண்டாம் என்று தெரணியகலை தமிழர்கள் கோரப் பட்டுள்ளனர்.

வீடுகளில் தங்கியுள்ள வெளியார்களின் விவரங்களை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தும்படி பிரதான குடியிருப்பாளர்களைப் பொலிஸார் கேட்டுள்ளனர். (ஒ-எ)

## செல்லச்சாமிக்கு எதிராக கோஷமிட்ட தொண்டா ஆதரவாளரை பொலீஸார் தாக்கினர்!

கொழும்பு, பெப். 17

இ. தொ. கா. பொதுச் செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி கலந்து கொண்ட கூட்டத்தில் அவரை இ. தொ. காவில் இருந்து ராஜினாமாச் செய்யக்கோரி கோஷமிட்ட தொண்டமானின் ஆதரவாளர்களான எட்டுத் தோட்டத் தலைவர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர் என்று முறையிடப்பட்டிருக்கிறது.

தொண்டமானுடனான மோதலில் தமது நிலையை விளக்குவதற்காக நுவரெலியா மாவட்டத்தில் தோட்டத் தலைவர்களின் கூட்டம் ஒன்றை திரு. செல்லச்சாமி கூட்டியிருந்தார். அப்போதே இத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செல்லச்சாமியை எதிர்த்து தொண்டமான் ஆதரவாளர் கோஷமிடவே, செல்லச்சாமியின் ஆதரவாளர்கள் அது பற்றி பொலிஸாரிடம் முறையிட்டனர். அதனைத் தொடர்ந்து அந்த எட்டுத் தலைவர்களும் பொலிஸாரினால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது. (ஒ-எ)

## இரத்மலானை இந்துவில் மீண்டும் ராணுவ முகாம்?

யாழ்ப்பாணம், பெப். 17

இரத்மலானை இந்துக் கல்லூரியில் இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று கல்லூரியைப் பார்வையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேல் மாகாணத்தில் உள்ள முக்கிய இந்துப் பாடசாலைகளில் ஒன்றான இரத்மலானை இந்துக் கல்லூரியில் மீண்டும் இராணுவ முகாம் அமைக்கப்படுமானால் பெருமளவு தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்றும்—

ஏற்கனவே பத்தாண்டுகளுக்கு மேல் இராணுவ முகாமாக இயங்கிய அந்தக் கல்லூரியில் இருந்து 1992 ஆம் ஆண்டிலேயே இராணுவம் விலகியது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுளது. (ஒ-5)

## சிகிச்சை நிலையத்தில் இளம்பெண் மர்ம மரணம்

யாழ்ப்பாணம், பெப். 17

தனியார் வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்றில் பணிபுரிந்த இளம் பெண் ஒருவர் அதே நிலையத்தின் நோயாளர் பரிசோதனைப் படுக்கையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

இறந்த பெண்ணின் இடது கண்ணில் இருந்து இரத்தம் வடிந்திருந்தது கழுத்தில் சிறு சிறு அடையாளங்கள் காணப்பட்டன. இடது மேற் கையில் ஊசி மருந்து ஏற்றப்பட்டது போன்ற அடையாளமும் தெரிந்தது. அதனைச் சுற்றி சுமார் நான்கு செனரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி.- பொலீஸ் மோதல் நிலை!

கொழும்பு, பெப். 17

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி. குழுவைச் சேர்ந்த ஆட்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்படவிருந்த மோதலை அப்பகுதியில் இராணுவக்கட்டளை அதிகாரி தலையிட்டு தவிர்த்துவிட்டார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து அப்பகுதி உதவிப் பொலீஸ் அதிபரை ஈ. பி. டி.பி. ஆட்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோதித்தகர்க்க எத்தனித்தது. அதனைத் தொடர்ந்து இம் மோதல் ஏற்படவிருந்தது.

ஈ. பி. டி. பி. யினரின் லொறியை நிற்கும்படி பொலீஸார் விடுத்த உத்தரவை, அவர்கள் மீறினர் என்றும்—

அதனைத் தொடர்ந்து ஈ. பி. டி. பி.யினர் தங்கள் துப்பாக்கிகளைத் தயார் நிலைக்குக் கொண்டுவந்தனர் என்றும்—

இக்கட்டத்தில் அங்குள்ள ஈ. பி. டி. பி. குழுவின் தலைவரும் இராணுவக் கட்டளை அதிகாரியும் தலையிட்டு மோதல் நிலையைத் தவிர்த்துக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் சிறை இருக்கும் அவல நிலை

கொழும்பு, பெப்ரவரி 17

நாட்டின் நெருக்கடியின் பின்னணியில் சந்தேகத்துக்கு இடமானவர்கள் என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் விடுவிப்பதற்கு அரசாங்கம் இழுத்தடிக்கிறது.

நீதிமன்ற விசாரணை முடிந்து, சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்குமாறு தீர்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும் —

தீர்ப்புக் குறித்துப் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிப்பதனை நீதிமன்ற நிர்வாகங்கள் தாமதம் செய்வதாலேயே —

தமிழர்கள் இவ்வாறு தொடர்ந்தும் சிறையில் இருந்து அவலப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்தத் தாமதம் குறித்து சட்ட உதவி நிலையம், மேல் நீதிமன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நீதியரசருக்கு முறைப்பாடு செய்துள்ளது.

தடுப்புக் காவலில் உள்ள சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இரண்டு மூன்று மாதங்கள் கடந்த பின்னரும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்று சட்ட உதவி நிலையம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினாலும், படையினராலும் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகளைவிட —

அண்மையில் கொழும்பில் விடுதிகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும் வைத்துக் கைது செய்யப்பட்ட பெரும் எண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பகுதியில் இன்னும் நிலைமை சுமுகமாக இல்லை

### திருமலையில் இருந்து பி.பி.ஸி. செய்தியாளர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 17

கிழக்கில் இப்போது கூட நிலைமை சுமுகமாக இல்லை என்பதையே, அங்கு இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.

கிழக்கிற்கு சென்றிருக்கும் பி பி ஸி செய்தியாளர், திருகோணமலையில் இருந்து இவ்வாறு அறிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு வடக்கே விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது அரச படையினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள், புலிப் போராளிகள் எவ்வளவு அருகில் இருக்கின்றனர் என்பதை தெளிவாக்குகிறது என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

கிழக்குப் பகுதி எங்கும் சோதனை முகாம்கள் மிகச் சாதாரண காட்சிகளாகி விட்டன என்று கூறும் அவர், பல நூற்றுக் கணக்கான பொலீஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதையும் குறிப்பிட்டுக் கூறுகிறார். (ஒ-எ)

## வேலையற்ற பட்டதாரிகள் நேற்று மாத்தறையில் பேரணி

கொழும்பு, பெப். 17

வேலையில்லாது இருக்கும் பட்டதாரிகள் பலர் நேற்று மாத்தறை நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இப்பேரணியில் வேலையற்ற பட்டதாரிகளுடன் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பொருத்தமான வேலை கிடைக்காது பட்டதாரிகள் அனுபவிக்கும் கஷ்டங்களை எடுத்துக்காட்டும் ஒரு நடவடிக்கையாகவே நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக ருகுணு பல்கலைக் கழகப் பொது மாணவர் பேரவையின் தலைவர் டபிள்யூ. டி. விமலசேகரா ''சதேந்ஸய''வுக்கு தெரிவித்தார்.

சுமார் 18 ஆயிரம் பட்டதாரிகள் பொருத்தமான வேலையைத் தேடி அலையும் அவல நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ 6)

## போருக்கு தீர்வுகாணும் ஆவலில் ஐ. தே.கவில் மீண்டும் சேர்ந்தேன்

### காமினி சொல்கிறார்

கொழும்பு, பெப் 17

வடக்கு – கிழக்கு யுத்தத்துக்கு தீர்வு காண வேண்டும் என்ற ஆவல் காரணமாகவே நான் ஐக்கிய தேசியக்கட்சியில் மீண்டும் சேர்ந்து கொண்டேன்.

முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா ருவான்வெலவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள மக்களில் ஒரு பகுதினர் அரச படையினரை எதிர்த்து பதினைந்து ஆண்டுகளாக சண்டையிட்டு வருகின்றனர். அங்குள்ள மக்கள் அமைதியாக வாழ முடியாது உள்ளது அங்கு பிள்ளைகளு இல்லை தேவையான உணவுப் பொருள்களை வாங்க முடியாதுள்ளது.

ஒவ்வொரு நிமிடமும் குண்டுத் தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்தில் அவர்கள் வாழுகின்றார்கள். அப்பகுதியில் உள்ள குழந்தைகள் அமைதியாக வாழமுடியாது உள்ளது. எமது பிள்ளைகளும் கொல்லப்படுகின்றார்கள்.

எமது காலத்தில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அப்போது தான் எமது எதிர்கால சந்ததி அமைதியாக வாழமுடியும். அரசாங்கத்தில் நான் மீண்டும் சேர்ந்ததற்கு இதுவும் ஒரு யுத்தத்தில் முழுவதுமாக மையைத்தான் என்பதை நாம் உணரவேண்டும்.

— இவ்வாறு அவர் கூறினார். (ஒ எ)

## பென்ஷன் வவுச்சர்கள் வந்து சேரவில்லை

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் இம் மாதத்துக்கான பென்ஷன் வவுச்சர்கள் 'ருகுணு' கப்பலில் எடுத்து வரப்படவில்லை

பென்ஷன் வவுச்சர்கள் கப்பலில் எடுத்து வரப்பட்டிருப்பதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்பட்டபோது பென்ஷன் வவுச்சர்கள் அடங்கிய பொதிகள் எதுவும் அதில் ஏற்றப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. (ஒ-5)

## சிறிமா, சந்திரிகா இருவரும் கிழக்கே செல்கின்றனர்

கொழும்பு, பெப். 17

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீ. ல. சு. கட்சி சார்பில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அவரது மகளும் மேல்மாகாணசபை முதலமைச்சருமான சந்திரிக்கா குமாரணதுங்காவும் அடுத்த வாரம் கிழக்கு மாகாணத்தில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளவுள்ளனர்.

அம்பாறை, திருமலை மாவட்டங்களில் எதிர்வரும் 23 ஆம் திகதி அவர்கள் இருவரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது. (ஒ-5)

## பிரேமா சிலையை திறக்க ஜனாதிபதி டி.பி. மறுப்பு

கொழும்பு, பெப். 17

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சிலையைத் திறந்து வைக்கும் படி விடுத்த அழைப்பை ஜனாதிபதி விஜேதுங்கா நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது தந்தையாரை நினைவுகூருமுகமாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச, தந்தையின் சொந்த ஊரான பவப்பிட்டி, கொஸ்கொட கிராமத்தில் 'பியகம' மாதிரிக் கிராமம் ஒன்றை அமைத்திருந்தார்.

அந்த மாதிரிக் கிராமத்தில் ''பியகம வாசிகள் முன்னணி'' என்ற அமைப்பு பிரேமதாசாவின் சிலை ஒன்றை எழுப்பியுள்ளது.

அந்தச் சிலையைத் திறந்து வைக்குமாறு முன்னணி ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு கடந்த வருட இறுதியில் அழைப்பு விடுத்தது.

அதனை திரு. விஜேதுங்கா நிராகரித்து விட்டதாக இப்போது தகவல் வெளியாகியுள்ளதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

(ஒ-எ-6)

## தேர்தல் பிரசாரத்திற்கு வர மறுத்த மட்டு. தமிழ் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

யாழ்ப்பாணம், பெப். 17

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த தமிழ் இளைஞர் ஒருவர் ரெலோ தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு காரடியனாறு என்ற இடத்தைச் சேர்ந்த வன்னியசிங்கம் யோகதரன் (வயது 19) என்ற இளைஞரே கொலை செய்யப்பட்டார்.

கடந்த வியாழனன்று ஒலிபெருக்கி மூலம் தேர்தல் பிரசாரம் செய்ய பிரஸ்தாப இளைஞரை ரெலோ உறுப்பினர்கள் அழைத்தனர் என்றும் —

பிரஸ்தாப இளைஞர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததை அடுத்து அன்றிரவு அவரை அவர்கள் சுட்டுக் கொன்றதாகவும் தெரியவருகிறது. (ஒ-5)

## சீனியுடன் கோமாரி

யாழ்ப்பாணம், பெப். 17

சீனி மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் இன்று பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என நேற்று கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

இக்கப்பலில் தபாற் பொதிகள் எடுத்துவரப்படுகின்றனவா என்பது நேற்று மாலை வரை தெரியவரவில்லை. (ஒ-5)

## மாணவருக்கு சீருடைத்துணி ஜூன் மாதம் கிடைக்கும்

கொழும்பு, பெப். 17

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை எதிர்வரும் ஜூன் மாதத்தில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

42 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கும், 498 பிரிவெனாக்களில் பயிலும் பிக்கு மாணவர்கள் 40 ஆயிரம் பேருக்கு காவி உடைகளும் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சீருடைக்கென 95 லட்சம் மீற்றர் துணி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளது.

ஆண்பிள்ளைகளுக்கு ஒன்றே கால் முதல் ஒன்றே முக்கால் யார் வரை சேட் துணியும் முக்கால் யார் தொடக்கம் 2 யார் வரையிலான காற்சட்டைத்துணியும், பெண்பிள்ளைகளுக்கு என 2 யார் தொடக்கம் 3 யார் வரையிலான சட்டைத் துணியும் வழங்கப்பட இருக்கின்றன. (ஒ-162)

### முச்சந்தி முரளி



முந்தி அவருக்கு சலாம் போட்டு, புறத்தாலை திரிஞ்சவர் இப்ப நன்றி மறந்த நிலைக்கு வந்திட்டார் கண்டியளே......!

## மாயமான வாகனங்கள் திடீரென வந்த மர்மம்!

சேவா வனிதா இயக்கத்தின் அலுவலகத்தில் இருந்து காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட ஆடம்பர மினி பஸ் ஒன்றும் மூன்று ஆடம்பரக் கார்களும் மர்மமான முறையில் நள்ளிரவில் கொண்டு வரப்பட்டு சேவா வனித அலுவலகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நான்கு வாகனங்களும் சேவா வனிதா இயக்கத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவையாகும்.

கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்ட பின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

9HP டீசல் என்ஜின் (வாட்டர்) 12'' 10'' இறைப்பு டர்கள் செற்றாக விற்கப்படும். முகவரி: நாராயணன் மில்ஸ், குஞ்சர் கடையடி, கரணவாய். பார்வையிடும் நேரம்: 1மணி முதல் 5 மணி வரை. (29449)

ஒரு நாள் லோமன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அனிஜா களஞ்சியம், 191, பிரதான வீதி, 4ஆம் குறுக்குத் தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (29469)

அடை வைப்பதற்குரிய பல இன முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சந்தசாமி அன் சன்ஸ், இல. 15, ஆடிய பாதம் வீதி, கல்வியங்காடு. (29463)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் தெற்கு இல. 23/12, முதலியார் ஒழுங்கையில் உள்ள (ஸ்ரான்லி கல்லூரிக்கருகில்) ஒரு பரப்பும் 4 குழியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. மேற்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்க. (29473)

## விற்பனையாகின்றது

ரமணிச்சந்திரன் எழுதிய சகல புத்தகங்களும் (1993ஆம் ஆண்டு உட்பட) வந்து வேகமாக விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. மகாலிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், ஸ்ரீகாந் புத்தகசாலை - யாழ், ஸ்ரீகாந் புத்தகசாலை - நல்லூர். (சி-7243)

கூந்தலில் பேன், சர், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் தடுக்கும், காவேரி சீயாக்காய் பவுடர் மேலும் கூந்தல் வளர்ச்சிக்கும், கண் குளிர்மைக்கும் சிறந்த பவுடர். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (29464)

## சனி பெயர்ச்சி

சனி பகவான் 11-2-94 முதல் 23-4-94 வரை 12 ராசிகளுக்கும் ஒரே புத்தகம் விலை 20/- கணிப்பு: எஸ். வெங்கடராமையங்கார், தியாகநகர், சென்னை. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7235)

## இரசாயனவியல்

பௌதிக இரசாயனம் (பயிற்சி நூல்) புதிய பதிப்பு வெளிவந்துள்ளது. ஆக்கம்: திரு. மகாதேவா அவர்கள். சுப்பிரமணியம் புத்தகசாலை, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (29465)

## தேவை

இனிப்பு வகை விற்பனைக்கு சைக்கிள் விற்பனையாளர் தேவை. விரும்பியோர் இல. 8, மணிக்கூட்டு வீதி (Hotel Ashok முன்பாக)க்கு 19-2-94 சனிக்கிழமை 9-12 மணிக்கிடையில் சமுகம் தரவும். (6972)

## மட்டக்களப்பில் புதிய முகாம்

மட்டக்களப்பு, பெப். 17
மட்டக்களப்பு மாவட்டம் நெல்லிக்காடு களிமடு என்ற இடத்தில் இராணுவத்தினர் புதிதாக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். [உ-த]

**ROYAL INSTITUTE**
[மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக]
மானிப்பாய்.

**SPOKEN ENGLISH**
BY:
**MR BRITTO**

புதிய பிரிவு
ஆரம்பம்:
**19-02-1994**
சனி 4p m.
[29459]

# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி,
நல்லூர்.

## ஆறாம் நாள் - இன்று

சோபனாஸ் - மதுரா பட்டுமஹால் நிறுவனங்களின் ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
எம். எஸ். சண்முகநாதன், எஸ். சுப்பிரமணியம் — நாதஸ்வரம்
பி. சின்னப்பழநி, கே. சேனாதிராஜா — தவில்

**5-00 — 5-15** மிருதங்க இசை
பி. ரதிரூபன், எம். கஜன்
எஸ். சிவசிவா, எஸ். சுதர்சமோகன்

**5-15 — 5-35** பாட்டு
ஆர். பிரியதர்ஷினி, எம். சாருமதி — பாட்டு
சுகிர்தா — வயலின்
ஏ. செல்வரத்தினம் — மிருதங்கம்

**5-35 — 5-55** புல்லாங்குழலிசை
பி. பத்மராஜா, வீ. சந்திரசேகரம், ரீ. கவிராஜ், ஏ. கனகரத்தினம் — புல்லாங்குழல்
ம. கிருஷ்ணவேணி — வயலின்
கே. மயூரன் — மிருதங்கம்

**5-55 — 6-15** வயலினிசை
பி. பத்மலோசனி, ஆர். கோதர்ஜனா, கே. சாருமதி, ரீ. சுதாஜினி, எஸ். மிருணாளினி — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
நந்தினி ராமலிங்கம் — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
திரு. ரீ. கோவிந்தசாமி (லீலா ஸ்ரோஸ்)
திரு இ. தேவராஜ் (சோபனாஸ் புடைவை)
திரு ச. சுதாகர்

தலைவர்:
கலாநிதி ஏ. வீ. மணிவாசகர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்:
திருமதி க. சிவசிதம்பரம்
(பிரதேச செயலர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர்:
திரு. இ. இளங்கோவன்
(உதவிப் பிரதேசச் செயலர், நல்லூர்)

**7-30 — 8-30** வயலினிசை
பாக்யலட்சுமி நடராஜா — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
எஸ். துரைராஜா — கஞ்சிரா

**8-30 — 9-30** பரத நாட்டியம்
''நாட்டிய கலாலயம்'' மாணவிகள்
தயாரிப்பு: பாரதி சிவயோகநாதன்

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்!
**R. V. G. பிடி ஸ்தாபனம்**
நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-7321]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 10 - 04 - 1910
விண்ணில்: 18 - 01 - 1994

**திருமதி சின்னம்மா சுப்பையர்**
திதி: 17 - 02 - 1994

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிபரப்பி, வழிகாட்டி, எம்மை ஆளாக்கி இறைவனடி சேர்ந்த எமது அன்பு அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை.

## TACEP ஆங்கில நெறி

வடமராட்சி மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு!
வட / இந்து மகளிர் கல்லூரியில் ''ரஸெப்'' ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
சனி, ஞாயிறு: பிற்பகல் 2-00 — 5-30
கடந்த வாரம் தகுதிகாண் தேர்வுக்குத் தோற்றாதவர்கள் இவ்வாரம் தோற்றலாம்

இணைப்பாளர்:
திருமதி J குலசிங்கம் (F. P. A)
[29476]

## முக்கிய அறிவித்தல்

### வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

### போலி வியாபாரக் குறிகள்

போலி வியாபாரக் குறிகளைக் கொண்ட குளுக்கோஸ், அப்பச்சோடா, நீலம் போன்றபோலி வியாபாரக் குறிகளை அல்லது கலப்படப் பொருள்களையோ வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்வதனூடாக ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்து போலி வியாபாரக் குறிகளுக்கு துணைபோகாது தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் ஒவ்வொரு வர்த்தக உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

- தலைவர்.

[சி 7244]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 - 04 - 1934
மறைவு: 28 - 02 - 1993

**அமரர் கி. வில்வராஜா**
திதி: 17 — 02 — 1994

ஆண்டு பல சென்றாலும் நீங்கா நினைவலைகளுடன்;

மனைவி, மக்கள், மைத்துனர் குடும்பம்
(29477)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

**A. R. சுப்பிரமணியம்**

அம்பலவாணர் வீதி, அத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த திரு அம்பலவாணர் இரத்தினசபாபதி சுப்பிரமணியம் 04-01-1994இல் இந்தியாவில் சிவபதமடைந்தார்.

அன்பின் பிறப்பிடமாக; பண்பின் உறைவிடமாக; அழகின் திருவுருவாக; பாசத்தின் பிணைப்பாக வாழ்ந்த எமது அருமைச் சகோதரரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர்,
A. R. ஆறுமுகம்,
A. R. சிவகுருநாதன்.

பலாலி வீதி,
கந்தர்மடம்.
[29475]

## முதலாம ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **வே. பறுவதம்**
மலர்வு: 12 07 1928
உதிர்வு: 28 02 1993

அமரர் **நா. வேலுப்பிள்ளை**
மலர்வு: 21 04-1914
உதிர்வு: 31-01-1993

திதி: 17 - 02 - 1994

ஐயா, ஐயா, அம்மா என்றே அழுது புலம்புகின்றோம். செந்நீரைக் கண்ணீரால் சேர்த்து வடிக்கின்றோம். அன்பின் உறைவிடமே, பாசத்தின் பிறப்பிடமே, பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து ஆளாக்கி விட்ட எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்குகளிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி.

நீங்காத நினைவுடன் வாடிடும்;
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்.

V. இராஜேந்திரம்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(29447)

# விவசாய உதவி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கவசதி

## விவரங்களைப் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், பெப். 17
விவசாய டிப்புளோமாதாரர்களை உதவி ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபை கோரியுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், கல்விச் சேவைச் சபை, இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல'' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் ஜனவரி 28 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் இடம்பெற்றுள்ளன.

அந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரதியை இலக்கம் 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் (அ-5)

## மண்டைதீவு கிராமிய சம்மேளனம் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

எதிர்வரும் 18 - 02 - 1994 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தீவக அரசியல் பணிமனையில் நடைபெறும். ஆகவே அனைவரும் தவறாது சமுகம் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு,
நிர்வாகம்.
[6976]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 04 — 1930
மறைவு: 28 — 02 — 1993

**அமரர் அரியபுத்திரர் நாகராசா**
(அப்பாவர்)
திதி - 17-2-1994

தந்தை என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தவரே
தன்னலம் பாராது தளர்வின்றி உழைத்தவரே
தனத்துடன் தன் நம்பிக்கையும் சேர்ந்தளித்தவரே
தந்தை சொல் மிக்க மந்திரமே
இல்லையென்று தரணியிலே வாழவைத்தவரே
நீங்கள் மறைந்தாலும் மறையவில்லை நினைவுகள்
நினைப்போம் நிறைவேற்றுவோம்
நின்பணிகளை தொடர்ந்தே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாவலடி வைரவரை இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(29479)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



மண்ணில்: 30 — 03 — 1914
விண்ணில்: 18 — 01 — 1994

**அமரர் கதிரவேலு செல்லத்துரை**
(இளைப்பாறிய பரிசோதகர்)

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களுக்கும் Dr. M. மகேசன் அவர்களுக்கும் உற்றார், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகவும் எமது வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்

''செல்வபதி''
உடுவில்.
(7003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அழுத்தங்கள் அவசியம்

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதில் தென்னிலங்கைத் தலைவர்கள் எவ்வளவு அசட்டையாகவும், எத்தனை அசமந்தமாகவும் இருக்கிறார்கள் என்பதனை கடந்த ஒரு சில நாட்களிலேயே எவரும் மதிப்பிட்டிருக்கவும், கணக்கிட்டிருக்கவும் முடியும்.

சமாதானப் பேச்சுக்கு அழைத்த பிரதமர், அதற்கான யோசனைகள் இந்தப் பக்கத்திலிருந்து சென்றதும் நிராகரிக்கிறார். நிபந்தனையில்லாமல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார் என்று வந்த அறிவிப்பு மாறி, இப்போது ஆயுதங்களைக் கைவிடாத வரை அவர்களுடன் பேச முடியாது என்ற அறிவிப்பு வந்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் நான் பேசுவதற்குத் தயார். ஆனால் அவர்களின் தலைவர் பிரபாகரன் தான் வருகிறார் இல்லை. நான் என்ன கதிரை, மேசைகளுடனா பேசுவது? — என்று கேட்டவர் ஜனாதிபதி விஜேதுங்கா. ஆனால் அவ்வாறு தெரிவித்த சில நாட்களிலேயே பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்று விடுதலைப் புலிகள், ஜனாதிபதியின் உறவினரான சர்வோதய ஆரியரத்ன மூலம் தகவல் தெரிவித்ததும் திடீரென 'பல்டி' அடித்தார்.

நான் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேசுவதாயின், சகல கட்சிகளும், பெரும்பான்மை இனமும் ஒன்று சேர்ந்து அது குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று கூறினார். இது நடக்கக் கூடிய காரியமா? தமிழர்கள் சூடுகண்ட பூனைகளாக இருந்துதானே புலிகளாக மாறினார்கள்.

சணம் பித்தம், சணம் வாதம் என்ற இந்த நிலை, முற்றமுழுதான ஏமாற்றுத் தனமே அன்றி வேறு எதுவும் அல்ல! இது ஒன்றும் புதிதும் அல்ல. சிங்களத் தலைவர்கள் ஒரு தலைமுறையிடம் இருந்து அடுத்த தலைமுறைக்கு என்று கைமாறிக் கொள்ளும் விசேட குணவியல்பு. ஆகையால் அதனை மாற்றுவது, திருத்துவது என்பது இயலாத காரியம்.

இதிலிருந்து பெறப்படுவது என்ன? தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குத் தாமே உழைக்க வேண்டும். அந்த உழைப்புப் பயன்தருவதற்கு வெளி உலகத்தின் ஆதரவு தேவை. அந்த ஆதரவு பலவகைப்பட்டதாக, பல்வேறு வடிவங்களில் அமையலாம்.

தமிழர் பிரச்சினையை, இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று வெளிநாடுகள் ஸ்ரீலங்காவுக்கு அழுத்தம் கொடுப்பது அவற்றில் ஒரு வழியாகும்.

இத்தகைய அழுத்தத்தை ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுக்குமாறு, ஆஸ்திரேலியாவில் உள்ள மத அமைப்புகள் தமது அரசை வலியுறுத்தி உள்ளதாக வெளிவந்த தகவல் கவனிக்கத் தக்கதாகும்.

இலங்கையில் நடக்கும் மோதலில் நேரடியாகப் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் இன்று உலகில் உள்ள மிகவும் பாரதூரமான யுத்தங்களில் இலங்கைப் பிரச்சினையும் ஒன்றாகும்.—

ஆனால் பொஸ்னியா யுத்தத்துக்கு வழங்கப்படும் இராஜதந்திரக் கவனம் இலங்கைப் பிரச்சினைக்குக் கொடுக்கப்படவில்லை.— என்று கத்தோலிக்க நிவாரண அமைப்பு ஒன்று ஆஸ்திரேலிய அரசுக்குச் சுட்டிக் காட்டியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

வெளிநாட்டு அரசுகளுக்கு அங்குள்ள சக்தி வாய்ந்த அமைப்புகள் அழுத்தம் கொடுத்தால், அரசுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படும், வெளிநாட்டு அரசுகளை தமிழர்கள் நேரடியாக அணுகி உதவுமாறு கேட்பதைவிட, அந்தந்த நாடுகளில் உள்ள அமைப்புகள் மூலம் அணுகுவது அதிக பயனைத் தரும். இவ்வழியில் செயற்பட இங்குள்ள சமய சமூக அமைப்புகள் தளராது பாடுபட வேண்டும்.

# முழுதாக விளைவதற்கு முன் உருளைக் கிழங்கு அறுவடை

## தரம் குன்ற இதுவே காரணமாம்

யாழ்ப்பாணம், பெப். 17

80 தொடக்கம் 85 நாள் பயிரான உருளைக்கிழங்கை, குடாநாட்டு விவசாயிகள் 60 முதல் 65 நாட்களுக்குள் அறுவடை செய்கின்றனர்.

உருளைக்கிழங்கு விலை சந்தைகளில் வீழ்ச்சி அடைவதற்கும்—

அதன் மாத்தன்மையும் சுவையும் குறைவதற்கும் இதுவே காரணமாகும்.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாயிகள் விற்றுப் பணம் பெறும் நோக்குடன் உருளைக் கிழங்கை அவசரப்பட்டு அறுவடை செய்வதால் ஏக்கருக்கான விளைச்சலும் குறைந்துள்ளது.

அத்துடன் சந்தைகளில் பெரும் அளவில் உருளைக் கிழங்கு வந்து குவிந்திருப்பதால் கிலோ 40 முதல் 50 ரூபா வரை அதன் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

நீண்ட நாட்களுக்கு கிழங்கை சேகரித்து வைக்க முடியாத நிலையும் இருந்து வருகிறது.

குடாநாட்டில் இம்முறை பெரும் அளவில் உருளைக் கிழங்கு விளைச்சல் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகள் அவசரப்பட்டு அதனை அறுவடை செய்வதால் கிடைக்க உள்ள பலனை முழு அளவில் அடைய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

### மொரட்டுவ பல்கலைக்கழகத்தில்

## கணிய அளவையியல் பாடநெறிகள் ஆரம்பம்

1991, 1992 ஆம் ஆண்டுகளில் ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சை எடுத்தவர்களுக்கான கணிய அளவையியல் (Quantity Surveying) பாடநெறிகள் மொரட்டுவப் பல்கலைக் கழகத்தில் ஏற்கனவே இம்மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி விட்டன என அறிய வருகின்றது.

1992ஆம் ஆண்டின் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் இன்னமும் அறிவிக்கப்படாத நிலைமையிலும் பாடநெறிகள் தொடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வடபகுதியிலிருந்து பின்வரும் மாணவர்கள் இப்பாட நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கப்படுகிறது.

திரு ரி. செந்தில்குமார், ஆம்பனை, தெல்லிப்பளை.

திரு ஜி எம். மதுரநேசன், கிரௌசவுல்ட் வீதி, (Graussalt Road) யாழ்ப்பாணம்.

திரு. எம். பாலசுப்பிரமணியம், குருக்கள் பகுதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

திரு. வீ. தங்கவடிவேல், இல. 115, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

திரு. எம். அருள்தாசன், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

திரு. எம். பால்ராஜ், 4 ஆவது ஒழுங்கை கோவில் புதுஒழுங்கை, வவுனியா.

திரு எம். என். தயாகரன், பிரதான வீதி, ஓட்டுசுட்டான். (க)

## 100 ரூபாவுக்கு பொருள் வாங்கினாலேயே சீனி!

வர்த்தக திணைக்களத்தின் மக்கள் கடைகளில் ஆளுக்கு அரைக் கிலோ சீனி 15 ரூபாவுக்கு வழங்கப்படுகிறது.

வெளியே கடைகளில் சீனி கிலோ 60 ரூபாவுக்கு விற்கப்படுவதால் பலரும் வர்த்தக திணைக்கள மக்கள் கடைகளை நாடுகின்றனர்.

ஆனால் 100 ரூபாவுக்குப் வேறு பொருள்கள் வாங்கினால் மட்டுமே அரைக் கிலோ சீனி இந்த விலையில் விற்கப்படுகிறது.

அதே சமயம் ஒரு ''கோம்பா'' சவர்க்காரம் வாங்கினால் மட்டுமே ஒரு "சன்லைட்" சவர்க்காரமும் 3 கிலோ மாவும் வழங்கப்படுகிறதாம்,

இது விலை போகாத பொருள்களை பாவனையாளர்களிடம் திணிக்கும் செயல் என பலரும் கருத்துத் தெரிவித்தனர். (இ-117-162)

## விமானப் படை தளபதி இன்று பதவி ஏற்பு

கொழும்பு, பெப். 17

ஸ்ரீலங்கா விமானப் படையின் பிரதான பதவி நிலை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க இன்று விமானப்படையின் புதிய தளபதியாகப் பதவி ஏற்கிறார்.

கடந்த 4 வருடங்களாக தளபதியாக இருந்து வந்த டெரன்ஸ் குணவர்த்தன இன்று ஓய்வு பெறுகின்றார். (ஓ-167)

## வான்கதவு மோதி மூவர் காயம்

தென்மராட்சி, பெப். 17

பயணிகளுடன் வந்த வாகனத்தில் மிதிபலகையில் பயணம் செய்த மூவர், அப்பாதையில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு வாகனம் ஒன்றின் கதவு திடீரென திறக்கப்பட, அதில் மோதி காயமடைந்தனர்.

கைதடிச் சந்திக்கு அருகில் நடந்த இச்சம்பவத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த என். ரமணன் (21 வயது) எஸ். துவாகர் (20 வயது), நுணாவிலைச் சேர்ந்த க. விமல் (20 வயது) ஆகியோரே காயமடைந்தவர்கள்.

இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர். (க-117)

# தற்போதைய ஈர நிலத்தை பயன்படுத்தி சிறுதானியத்தைப் பயிரிட ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாவட்டத்தில் நெல் அறுவடை செய்த வயல்களில் தற்போது உள்ள ஈரம் உழுவதற்கு ஏற்றதாக இருப்பதால், நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உடனடியாக வயலை உழுது பயறு, கௌபி, எள்ளு போன்ற மறுவயல் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுப் பயன் பெறவேண்டும்.

யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திரு த. சிவலோகநாதன் மேற்கண்டவாறு கோரி உள்ளார்.

பரவலாக எல்லா வயல் நிலங்களும் இச் செய்கைக்கு உட்படுத்தப்படும்போது கட்டாக்காலி ஆடு, மாடுகளின் பிரச்சினையும் ஏற்படமாட்டாது. அத்துடன் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்மாவட்டத்தில் உள்ள முக்கிய வர்த்தக நிலையங்களில் விதைப்பதற்கு ஏற்ற தரமான பயறு, கௌபி, எள்ளு ஆகிய விதைகளை நியாயவிலையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆகவே விவசாயிகள் அவற்றைப் பெற்றுத் தமது விதைத்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புக் இருக்கின்றது.

ஆதலால் பல ஆண்டுகளுக்குப்பின் இக்காலபோகத்தில் பரவலாகக் கிடைத்த பெரு மழையினால் ஏற்பட்ட வயல் ஈரத்தைச் சகல விவசாயிகளும் பயன்படுத்தி மறு வயல்பயிர்களை பயிரிட வேண்டும். இதனால் தாமும் பயன்பெறுவதுடன் குடாநாட்டு மக்களும் பயன் பெறச் செய்வதுடன் வயல் மண்ணையும் வளம் கொழிக்கச் செய்யலாம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-17)

# பொருளாதார சுதந்திரம் பெற்று சுயசார்புகாண உழைக்கவேண்டும்

## பாராட்டு விழாவில் துணைவேந்தர்

வலிகாமம்தெற்கு, பெப். 17

''நாம் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும். சுயசார்பானவர்களாக எமது மக்கள் வாழ வேண்டும். இவற்றுக்காக நாம் பாடுபட்டு உழைக்க வேண்டும்''

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு மலர் வெளியீடு மற்றும் சேவை நலம் பாராட்டு விழாவில் மலரை வெளியிட்டு வைத்து பாராட்டுரை வழங்கிய யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இவ்வாறு கூறினார்.

திரு. இ. கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் அவர் மேலும் கூறியதாவது;

உலகில் 500 கோடி மக்களில் 100 கோடி மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள். ஒரு நாளுக்கு 35 ஆயிரம் மக்கள் பட்டினியால் இறக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மூன்றாம் உலக நாடுகளில் சுகாதார, நிதி, உணவு வசதிகள் இன்மையால் அவற்றைப் பிற நாடுகள் வழங்கி வருகின்றன. இவற்றை வழங்குவதைவிட அந்தந்த நாடுகளில் அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான வேலை வாய்ப்புகளையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்கி அந்த நாட்டு மக்களை பொருளாதார சுதந்திரம் பெற வைக்க வேண்டும். சுயசார்பான மக்களாக எமது மக்களை வாழ வைக்கும் பணியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஈடுபட்டு வருகிறது.

தமிழ்ழ நீதித் துறைப் பொறுப்பாளர் திரு. பரா தமது உரையில் கூறியதாவது:

சமூக சேவை, பொதுப் பணிகளில் ஈடுபடுவோர் சுயநலமற்றவர்களாக இருந்து பிரதேசத்துக்கும் மக்களுக்கும் அக்கறையுடன் சேவைபுரிய வேண்டும். உலகில் அகதிகளாக தமிழரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இந்த நிலை மாறவேண்டும்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கூறியதாவது:

மல்லாகம் கிராம அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சிக்காக பாடுபடுவதையே தம் நோக்காகக் கொண்ட இப்பெரியார்களை வாழும் காலத்திலேயே கௌரவிக்கவேண்டும். சமயம், தமிழ், பொருளாதார வளர்ச்சிகளில் இவர்களின் பணி தொடரவேண்டும்

திருவாளர்கள் நம. சிவப்பிரகாசம், சு. ஸ்ரீபாஸ்கரன் ஆகியோருக்கு மகரவிருது தங்க வெள்ளிப் பதக்கங்கள், சங்கிலிகள், பொன்னாடைகள், பொற்கிழிகள், பட்டங்கள் வழங்கப்பட்டன. பாடசாலைகள், சமூக அமைப்புக்கள் பல அவர்களைக் கௌரவித்தன.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் மலர் ஆய்வுரை நிகழ்த்தினார். மலரின் முதற் பிரதியை யாழ். வீனஸ் நகை மாளிகை உரிமையாளர் திரு. புவிச்சந்திரன் பெற்றார்.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், முன்னாள் உதவி அரச அதிபர் திரு. வை. இராசையா, வலி-வடக்கு விசேட ஆணையாளர் திரு. [illegible] ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## இசைவிழா நிகழ்ச்சிகள்

இளங்கலைஞர் மன்ற இசை விழாவின் ஆறாம் நாளான இன்று நந்தினி ராமலிங்கத்தின் பாட்டும், பாக்கியலட்சுமி நடராசாவின் வயலின் இசையும், நாட்டிய கலாலய மாணவிகளின் பரத நாட்டியமும் நடைபெறும்.

இன்றைய விழாவுக்கு யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வீ. ஏ. மணிவாசகர் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசச் செயலர் திருமதி க. சிவசிதம்பரம் கலந்துகொள்வார். (க-111)

## கரப்பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், பெப். 17

கரவெட்டி இராஜா கிராமத்தில் நடைபெற்று வரும் கிராமியப் பசறை நிகழ்வில் இன்று — விளையாட்டு நிகழ்ச்சியாக — 'செற் அப்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டி இடம்பெறும்.

சிநேகபூர்வமான இந்த ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் பங்கு கொள்ளவுள்ளன. (ஓ-5)

# காணாமற்போன இரத்தினக்கல் ரூ.1 கோடி பெறுமதியானது!

## செல்வம் பெருகும் ஆனால் இறப்பு ஏற்படுமாம்

ஜனாதிபதி மாளிகையின் வணக்க அறையில் வைக்கப்பட்டிருந்த விலை மதிக்க முடியாத இரத்தினக்கல் ஒன்று காணாமற்போனது குறித்த செய்தி ஒன்று சமீபத்தில் வெளிவந்திருந்தது அல்லவா?

இந்த இரத்தினக்கல் குறித்து அரச சார்பு கொழும்புப் பத்திரிகை ஒன்று மேலும் பல தகவல்களை வெளியிட்டுள்ளது.

உலகிலேயே இந்த வகையான இரத்தினக்கல் வேறு எந்த நாட்டிலுமே கிடையாதாம்.

இலங்கையைப் பொறுத்த வரை இது ஒரு புதையல் போன்றதாகும்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பிரபல செல்வந்த வர்த்தகர் ஒருவரினால் இந்த இரத்தினக்கல் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்த இரத்தினக்கல்லை வைத்திருப்பவருக்கு மேலும் செல்வம் பெருகும். அதே சமயம் அவரது குடும்பத்தில் இறப்புகளும் ஏற்படும் என்று அதனை ஜே. ஆரிடம் வழங்கிய செல்வந்த வர்த்தகர் தெரிவித்திருந்தார்.

இதனை வைத்திருந்த வர்த்தகர்கள் பலர் பெரும் செல்வந்தர்கள் ஆகினர். ஆனால் அவர்களுக்கு குடும்பத்தில் இறப்புகள் ஏற்பட்டபோது இதனை விற்றனர்.

இப்படியாக பல வர்த்தகர்களிடம் கைமாறியே கடைசியாக இது ஜே. ஆரின் கைக்கு வந்து சேர்ந்தது.

ஜே. ஆரிடம் இது வழங்கப்பட முன்னர் வெளிநாட்டுக் கோடீஸ்வரர் ஒருவர் இதனை ஒரு கோடி ரூபா கொடுத்து வாங்க முயன்றார். எனினும் அது விற்கப்படவில்லை. இரத்தினக் கல்லில் உள்ள விசித்திரம் என்னவென்றால் இதனை உற்று நோக்கினால் அதில் டகோபாவின் பிம்பத்தைக் காண முடியும் என்று கூறப்படுகிறது.

ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி மாளிகையின் பூசை அறையில் அந்தக் கல் வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஜே. ஆரோ அல்லது அவரின் பின்னர் வந்த பிரேமதாசவோ ஜனாதிபதி மாளிகையில் குடியிருக்கவில்லை.

டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகிய பின்னர் ஜனாதிபதி மாளிகையில் உள்ள பொருள்கள் பற்றி கணிப்பீடு ஒன்று செய்யப்பட்ட போதே அந்த விலை மதிப்பற்ற இரத்தினக் கல் காணாமற் போனது தெரியவந்ததாம்.

மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த விவரம் தற்போது தான் வெளியிடப்பட்டுள்ளது. இதனைக்கண்டு பிடிக்கும் முயற்சியில் ரகசியப் பொலீஸார் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# ஐ. தே. கவுக்கு வாக்களிக்காவிடில் அகதிகளுக்கான உதவி நிறுத்தம்

## இப்படியும் தேர்தல் பிரசாரம்

கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலின்போது அங்குள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மக்களின் வாக்குகளை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

கிழக்கில் உள்ள அகதி முகாம்களில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 54 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்போரின் மொத்த எண்ணிக்கை சுமார் 30 ஆயிரமாகும். இவர்களில் 70 வீதமானோர் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அகதிகளில் 60 வீதத்தினர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இடம்பெயர்ந்து பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள இந்த மக்களிடம் தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு வாக்களிக்குமாறு சமூகசேவை அதிகாரிகள் மூலமாக ஆணையிடப்பட்டிருப்பதாகவும் —

அவ்வாறு வாக்களிக்கத் தவறுவோர் தங்கியுள்ள முகாம்களுக்கான உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ-5)

## தேர்தலுக்கு எதிராக மட்டக்களப்பில் சுவரொட்டி

மட்டக்களப்பு கிரான் குளத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதனை அடுத்து அங்கு மாலை 6 மணிக்குப் பின்னர் இராணுவத்தினர் ஊரடங்கை அமுல்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

### தமக்கு வாக்களித்தால்

## காணாமற் போனோரை கண்டுபிடித்து தருவார்களாம்

### கிழக்கில் ஈ. பி. டி. பி. பிரசாரம்

''தேர்தலில் எமக்கு வாக்களித்தால் காணாமற் போனவர்களைக்கண்டுபிடித்துத்தர முயற்சிப்போம்''

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலில்போட்டியிடும் ஈ. பி. டி. பி. வேட்பாளர்கள் அங்குள்ள தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்று இவ்வாறு பிரசாரம் செய்துவருகின்றனர் என கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு களுத்துறை, மகஸின் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் பட்டியல்களை மக்களின் பார்வைக்கு வைத்து அவற்றைப் பார்க்க வருவோரிடம் எமக்கு வாக்களித்தால் உங்கள் பிள்ளைகளை விடுவித்துத் தருவோம் என்று கூறியும் சில வேட்பாளர்கள் பிரசாரங்களில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### கொழும்பில்

## தமிழ்பத்திரிகையாளர் கடத்தப்பட்டார்!

லேக் ஹவுஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

தினகரன் ஆசிரிய பீடத்தில் கடமையாற்றி வந்த தேவராசா செந்தில்வேலவர் (வயது 26) என்பவரே கடத்தப்பட்டவர் ஆவார்.

கடந்த முதலாம் திகதி காலை பம்பலப்பிட்டியில் உள்ள தனது வீட்டில் இருந்து வெளியே கடைக்குச் சென்ற பின் அவர் மீண்டும் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் வீட்டைச் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியுள்ளனர்.

அவர் யாரால் கடத்தப்பட்டார் என்பதும்— எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரியவரவில்லை என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-5)

## அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 17

மத்திய அரசு எழுதுவினைஞர், கணக்குப் பதிவாளர், சிறாப்பர், களஞ்சியப் பொறுப்பாளர், தட்டெழுத்தாளர் (தமிழ் / ஆங்கிலம்) ஆகிய சேவைகள் சம்பந்தமாக 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் யாழ் செயலகத்தில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்—

இதுவரை நியமனக் கடிதங்கள் பெற்றுக் கொள்ளாத சகலரையும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் காரியாலய உதவியாளரைச் சந்திக்கும்படி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ஓ 162)

**அந்நிய உணவை மறப்போம் - நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டி

ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. சி. நாகையா தலைமையில் நடைபெறும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ெற. இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சொர்ணம் செல்லையா

அராலி வடக்கைச் சேர்ந்த திருமதி சொர்ணம் செல்லையா 15-02-94இல் சிவபதம் அடைந்தார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் நூலகர், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், யோகலட்சுமி, காலஞ்சென்ற இராஜலட்சுமி, இராஜேஸ்வரி (அமெரிக்கா), காலஞ்சென்ற சரவணபவான், இராஜமலர் (லண்டன்), டாக்டர் சூரியகுமார் (FRCS. லண்டன்) ஆகியோரின் பாசத் தாயாரும், ஜெகதீஸ்சன் காலஞ்சென்ற இராஜரட்ணம், டாக்டர் வைரவப்பிள்ளை (அமெரிக்கா), வசந்தா (கனடா), நேமிநாதன் (லண்டன்], உமையாள் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ஜெயந்தினி (கனடா), டாக்டர் சாந்தினி, லோகேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), சுதர்சன், ரமணி காலஞ்சென்ற விக்கினேசன், இறஞ்சித், செல்வேந்திரன் (கனடா), டுஷி தர்மேந்திரன் (கனடா), அபர்ணா (கனடா), சுமங்கலா, பிரசன்னா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 16-02-94 (புதன்) அராலி மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
S லோகேஸ்வரன்

"இலட்சுமி வில்லா"
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (29468)

## திருமதி தங்கமுத்து காத்திகேசு

நுணாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தங்கமுத்து காத்திகேசு 16.2.94 அன்று அகால மரணமானார்.

இவர் அமரர் திரு. காத்திகேசுவின் அன்பு மனைவியும், விஜயரட்ணம், வரதலிங்கம் (கொழும்பு), செல்வமுது, தேவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவபாக்கியம், நாகேஸ்வரி, நவரத்தினம், கோகிலா ஆகியோரின் மாமியாரும் சாந்தரூபன், காந்தரூபன், மலர்விழி, கயல்விழி, ரஞ்சனா, மதனரூபன், தாரணி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-2-94) மூற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
திருமதி செல்வமுது நவரத்தினம் (மகள்)

நுணாவில் (29435)

## சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை (உடையார்) 16-2-94 மாலை காலமானார்.

இவர் மரியம்மாவின் அன்புக்கணவரும், எட்வின் யோசவ், (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்) டெனிசியஸ் (தபாலதிபர், சங்கானை) காலம் சென்ற வில்லியம் ஜெயராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), றஞ்சிதம் (லண்டன்), புஸ்பம் (லண்டன்), புனிதம் (லண்டன்), அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை (பங்குத் தந்தை, அரியாலை), இன்பம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர், ஜெயமணி (ஆசிரியை, பெரிய விளான்), பத்மா (அல்லைப்பிட்டி), யேசுதாசன், ஜெயராஜா, யோ. தேவா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்வியராஜ், கொலின், மொறின், அரவிந் ஆர்த்தி ஜெயசங்கீதா, றோகான், டயான், யேசுவ, யோஆன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று 17-2-94 மாலை 3 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலியுடன் ஆரம்பமாகி பூதவுடல் நல்லடக்கத்திற்காக இலாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ம. எட்வின யோசவ் (மகன்)

41/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (29487)

## சின்னத்தம்பி அம்பிகைபாகன்

(பாகர்)

(ஓய்வு பெற்ற படவரை ஆசிரியர்)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சி. அம்பிகைபாகன் (16-02-94) நேற்று காலமானார்.

இவர் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவனும், உரும்பிராய் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியரும், அமரர் பொன் அம்பிகைபாகனின் (ஸ்தாபகர் சைவப்பிரகாச வித்தியாசாலை) பேரனும், அமரர் சி ஆறுமுகதாசரின் (தாசர்) (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புத் தம்பியும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன் (கட்டடத்திணைக்களம்), அமரர் ஸ்ரீதரன் (கட்டடத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீ நேசராணி (ஆசிரியை இராமநாதன் கல்லூரி) ஸ்ரீ பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீவாணி, ஸ்ரீ சரவிந்தன் ஸ்ரீ அசோகன், ஸ்ரீ ரஞ்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று 12 00 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், பழையமாணவர்களுக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்
அ ஸ்ரீகாந்தன் (மகன்)

ஸ்ரீவாசம்
இணுவில் தெற்கு
இணுவில் (29481)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 203/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சிகிச்சை நிலையத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீற்றர் விட்டத்துக்கு மருந்து ஏற்றியது போல உப்பிக் காணப்பட்டது. வலது குத்திய இடத்தில் சிறு கொப்பளம் போல நீர்கட்டிக் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது மரணமான பெண்ணின் வயிற்றில் ஆறு மாதங்களுக்கு குறையாதது என மதிப்பிடத்தக்க பெண் சிசு ஒன்றும் காணப்பட்டது.

இந்தப் பெண்ணின் சடலம் அவரது சகோதரரால் நேற்று அதிகாலை காவல்துறையினரின் உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் மரணவிசாரணை நடைபெற்றது. எனினும் தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டது.

இறந்த இளம்பெண் வயாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து சிறுப்பிட்டியில் வசித்து வந்தார் என்றும் —

சுன்னாகத்தின் கிழக்குப் பிரதேசத்தில் இயங்கிய அந்தத் தனியார் சிகிச்சை நிலையத்துக்கு இறந்த பெண்ணின் பெயரே சூட்டப்பட்டிருந்தது என்றும்—

அந்த வைத்திய நிலையத்தில் டாக்டர் ஒரு சில மணிநேரமே பணி புரிவார் என்றும்—

ஏனைய வேளைகளில் எல்லாம் இந்தப் பெண்ணே நோயாளருக்குச் சிகிச்சை அளிப்பது வழங்கம் என்றும்—சொல்லப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை மாலை நான்கு மணிக்குச் சிகிச்சைக்குச் சென்ற பெண் நோயாளி ஒருவர் சம்பந்தப்பட்ட பெண்ணைக் காணாது கூப்பிட்டு விட்டு, அயல் வீட்டில் விசாரித்தாராம். பின்னர் இருவரும் சிகிச்சை நிலையத்திற்குள் சென்று பார்த்தபோது, நோயாளரைப் பரிசோதிக்கும் படுக்கையில் இளம் பெண் படுத்திருக்கக் காணப்பட்டதாகவும், தட்டிப்பார்த்த போது அவர் பேச்சு மூச்சின்றிக் கிடந்ததைத் தொடர்ந்து காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. (அ-15)

எடிசன்
அக்கடமி
(யாழ் இந்து அருகில்)
411/1, K K S Rd,
JAFFNA.
Spoken English
By
BRITTO
ஆரம்பம்
17-02-1994
பி.ப. 4 மணி
(வியா., வெள்ளி 4 மணி)
(சி/725)

## விபத்தில் மரணம்

கட்டுடை பிரதான வீதியில் நேற்று மாலை 4. 30 மணிக்கு இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் ஒருவர் அவ்விடத்திலேயே மரணமானார்.

இச் சம்பவத்தில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தாமு அற்புதசிலன் (வயது 60) என்ற வயோதிபரே மரணமடைந்தார். (ஒ-15-90)

மாயமான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர். இவ்வாகனங்கள் காணாமற் போய்விட்டன. அச்சமயத்தில் திருமதி ஹேமா பிரேமதாச சேவா வனிதா இயக்கத்தின் தலைவியாக இருந்தார்.

காணாமற்போன இவ்வாகனங்களைக் கண்டுபிடிக்க சேவா வனிதா இயக்கத்தின் தற்போதைய நிர்வாகம் ரகசிய பொலீஸாரின் உதவியை நாடியிருப்பதாக செய்திகள் வெளியானதைத் தொடர்ந்தே அவ்வாகனங்கள் இனந்தெரியாதோரால் இரவோடு இரவாக கொண்டு வரப்பட்டு அலுவலகத்தின் முன் நிறுத்தப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-எ)

தடுப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னிக்கையான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும்—

இவ்வாறு நீதிமன்ற விசாரணையின் பின்னர் விடுதலைக்கு உத்தரவிடப்பட்டும் விடுவிக்கப்படாமல் உள்ளே வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துத்தான் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற விதிமுறை தமிழர்களை துன்புறுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட விதிமுறை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தத் தாமதம் மிகக் கொடுமையான மனிதஉரிமை மீறல் எனவும் கண்டிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் படுவோரை விசாரணை இன்றித் தடுத்து வைப்பதனை சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமை மீறல் என்று ஏற்கனவே கண்டித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1994

## விடுமுறைச் சந்தை: இடம் மின்சார நிலைய வளவு

25-02-94 ஆம் திகதி முதல், 31-05-94 ஆம் திகதி வரையான காலங்களுக்கு மின்சார நிலைய வளவு (பழைய பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில்) சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் இடங்களை குத்தகையில் விடுவதற்கு, அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால், 23-02-94 ஆம் திகதி, புதன்கிழமை நண்பகல் 12 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும், கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 50 00ம் செலுத்துவதன் பேரில், 22-2-94 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி. பகல் 3 00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்று கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள்.......... விடுமுறைச் சந்தைக்கான கேள்வி என எழுதப்பட்ட கடித உறையில் இட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 23-02-94 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவல நேரத்தில் அறிந்து கொள்ளலாம்

| இட விபரம் | கேள்விப் பிணைப் பணம் | படிவக்கட்டணம் |
|---|---|---|
| சதுரத்துண்டுகள் 22 | 250/- | 50/- |
| வட்டத்துண்டுகள் 18 | 250/- | 50/- |

வே பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/7350)

யாழ்ப்பாண மாநகர சபை

# கேள்வி அறிவித்தல் - 1994

கீழ்க் காணும் விவரங்களுடைய கடைகளுக்கு கேள்வி கோரப்படுகிறது.

1. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை

| | | கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| கடை இல 08 | 1 வருடம் | 2500/- | 4166/- |
| கடை இல 09 | 1 வருடம் | 2500/- | 4416/- |
| 2 நாவாந்துறை கோழிக்கடை | | | |
| கடை இல 10 | 1 வருடம் | 2500/- | 4166/- |
| 3 பஸ் நிலையக் கடை | | | |
| கடை இல. 18ஏ | 5 வருடம் | 2500/- | 18000/- |

கேள்விப் படிவம் வழங்கும் திகதி: 22 - 02 - 94 செவ்வாய்க்கிழமை பி.ப. 3-00
கேள்வி ஏற்கும் திகதி: 23 - 02 - 94 புதன்கிழமை நண்பகல் 12-00 வரை

தபாலில் அனுப்பப்படும் கேள்விகளின் தாமதத்திற்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

மேலதிக விவரங்களை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்,
யாழ் மாநகரசபை,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

[சி 7349]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் உபயகாரர்களின் பொதுக் கூட்டம்

இடம்: ஆலய மண்டபம்.
காலம்: 27-02-1994 ஞாயிற்றுக்கிழமை மு ப. 10மணி
தலைவர்: திரு. வை. செல்லையா அவர்கள்

உபயகாரர் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம். பிரேரணைகள் இருப்பின் ஆலய காரியாலயத்தில் 22-02-94 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

(7002) தர்மகர்த்தாக்கள் சபை

## முதலாம் ஆண்டு அமரத்துவ அஞ்சலி



அன்னை மடியில்: 03 — 03 — 1910

ஆண்டவன் அடியில்: 28 — 02 — 1993

## வீரகத்திப்பிள்ளை இரத்தினம்

(சாமியார்)

கலைமகளின் கருணையால் கலைகளின் உறைவிடமாய்
குலைகள் பலவுடைய மா, பலா, வாழையொடு
பலஉயர்ந்த உத்தியோக விற்பனர்கள் புடைசூழ்ந்த
அளவையூர் எனும் பதியில் அவதரித்த அரும் புதல்வன்
மானிப்பாய் எனும் ஊரை நலமுடனே நண்ணியவர்
வீரகத்திப்பிள்ளையெனும் நாமமுடை இரத்தினம்
"சாமியார்" என்றயலார் செல்லமாய் -
அழைத்திடுவார்.
இயந்திர இயக்குநராய் வாழ்ந்துமே வந்தவர்
இறைவனின் அடியாராய் இருந்துமே பலவுயர்ந்த
கோயிற் தொண்டுகளை உறுதியுடன் செய்து வந்தார்
ஊரவர்க்கு நண்பனாய், உறவினர்க்கு நல்லவனாய்
எல்லாச் சிறப்புடைய அருங்குணங்கள் கொண்டவரே
ஆயிரத்துத் தொளாயிரத்தி தொண்ணூற்றி -
மூன்றாண்டில்
உயர்மாசி கார்த்திகைத் திருநாளில் உயிர்நீத்த -
உத்தமனின்
ஆத்மா நலமுடனே சாந்தியடைந்தேயிருக்க
இறைவனின் பாத கமலங்களே யென்றும்
நாடியே நிற்கின்றோம் நாம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டாக்டர் சிறீஸ்காந்தன் பாலாம்பிகை,
றஞ்சிதா வைத்தியசாலை,
மானிப்பாய். (6974)

# மரண அறிவித்தல்

## பூதத்தம்பி கந்தையா

(இளைப்பாறிய வைத்தியர் பண்டாரவளை)

பூதத்தம்பி கந்தையா அவர்கள் (14-2-94) அன்று வியங்காவல பண்டாரவளையில் காலமானார்.

இவர் நீர்வேலியைப் பிறப்பிடமாக கொண்டவரும் உடுவில் மேற்கைச் சேர்ந்த நாகபூசணியின் அன்புக் கணவரும், சிவானியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம், திருமதி. க மயில்வாகனம் ஆகியோரது மூத்த மருமகனும், நீர்வேலியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் பூ. கதிரவேலு, திருமதி கந்தையா, திருமதி குமாரசுவாமி (கனடா) ஆகியோரின் சகோதரரும், திருமதி நவேந்திரராணி சிற்சபேசன், திருமதி நவபுஷ்பம் கதிர்காமநாதன், ம. சிவலிங்கம் (பெரிய கிளாக்கர் அமிர்தகல) ஆகியோரின் மைத்துனரும், உடுவிலைச் சேர்ந்த ஆ. சிற்சபேசன் (மக்கள் வங்கி முகாமையாளர் யாழ் பல்கலைக் கழகம்), கோப்பாயைச் சேர்ந்த திரு. பொ. கதிர்காமநாதன் (தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்) அளவெட்டியைச்சேர்ந்த திருமதி சி. ஜெயலக்சுமியின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (16-02-94) புதன்கிழமை பண்டாரவளையில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ சிற்சபேசன் (சகலன்)

உடுவில் மேற்கு,
சுன்னாகம். [29489)

## திருமதி செல்லம்மா நாகலிங்கம்

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவி திருமதி நா. செல்லம்மா நேற்று [16-2-93] சிவபதமடைந்தார்.

அன்னார் குணசிங்கம், மணிவாசகம் பிள்ளை, தனபாக்கியம், சந்திரபூபதி, லோகேஸ்வரி, ஞானசவுந்தரலிங்கம், குணமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் கு. குங்குமணி, ம. தையல்நாயகி, அ. சோமசுந்தரம், ந. கார்த்திகேசு, ஆ. யோகானந்தம், ஞா. வாசுகி, பொ. சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மாமியாரும், றோபானந்தி, கேதா, முகிர்தாத், சிவகௌரி, கௌரிசன், சுரேஷ், கார்த்திகா, கார்த்திக், பிரியதர்சி, மாறன், மகிழ்னன், அரன், சஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 17-2-94 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

'லிங்கவாசா'
சங்கத்தானை,
சாவகச்சேரி. (29490)